1968 ஆகஸ்ட் 17]

Directorate of Treasuries

* 11 Q.—THIRU A. M. RAJA: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to merge the Directorate of Treasuries with the Examiner of Local Fund Accounts Department; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

உலகத் தமிழ் மாநாட்டிற்கு அழைப்புகள்

*** 12 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதா ?

(இ) இல்லை என்றால், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ஆம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை இந்த மன்றத்தில் எழுப்புகிற சூழ்நிலை வந்ததற்கு வருந்துகிறேன். உலகத் தமிழ் மகாநாட்டிற்கு மட்டும் அல்ல, குடியரசுத் தலைவர் வந்த விழாவிற்கும் சரி, நேற்று கோட்டையிலே நடைபெற்ற கொடியேற்று விழாவிற்கும் சரி பலருக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்படவில்லை, ஏன் இந்த பாரபட்சம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கோட்டையில் கொடியேற்று விழா நடைபெற்றது. அதற்கு வழக்கம்போன்று நகரத்தில் உள்ள எம்.எல்.ஏ., எம்.எல்.ஸி., எம்.பி.-க்களுக்கு எல்லாம் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன.

திரு. கே. விநாயகம் : உலகத் தமிழ் மகாநாடு நடந்தபோது சட்டசபை அங்கத்தினர்களுக்கு அழைப்பிதழ்கள் தரப்படவில்லை என்று பல புகார்கள் வந்தன. அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலையும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனாலும் திரு. கருத்திருமனைச் சேர்த்துக் கொண்டிருக்கலாம், மாஜி முதல் அமைச்சர் அவர்களைச் சேர்த்துக்கொண்டிருக்கலாம்—அவர் இவர்களுக்கு வேண்டியவராக இருக்கலாம்—ஆயினும் இது ஏதோ திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் நடத்துவதுபோல,